**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.246/2022 P.W.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சின்னசாமி | த–பெ | நாகநாததுரை |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 64/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | சார்பு ஆய்வாளர் ஓய்வு | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.09.2025**

**2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் பணியாற்றி பணி ஓய்வில் உள்ளேன். இதற்கு முன்பு 2014ம் வருடம் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது 02.02.2014 அன்று 17.00 மணிக்கு கவிதா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப்பெற்று நிலைய குற்ற எண்.26/2014 பிரிவு 392 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **புகார் அசாஆ 1. முதல் தகவல் அறிக்கை அசாஆ 2.** பின்னர் வழக்கு கோப்பை ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

குறுக்கு விசாரணை

புகாரை எழுதியது யார் என்றால் புகாரை எழுதி கொண்டு வந்தார்கள். புகாரில் காணாமல் போனது ஒரு தோடா அல்லது ஒரு ஜோடி தோடா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் காதில் காயம் ஏற்பட்ட தாக சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரே ஏதோ வாகனத்தில் ஆட்கள் வந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். திருமணத்திற்கு சென்றுவிட்டு எந்த திசையில் எப்படி போனேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தவறான புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J
Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.09.17 17:33:43 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி